# இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் திரு. வினய் மோகன் குவாத்ராவின் ஜப்பான் பயணம் (பிப்ரவரி 07-08, 2024)

பிப்ரவரி 08, 2024

1. ஜப்பான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் துணை அமைச்சர்கள் அளவிலான கலந்துரையாடல் மற்றும் வெளியுறவுத்துறை ஆலோசனைகளுக்காக இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் திரு. வினய் மோகன் குவாத்ரா அவர்கள் 2024 பிப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் டோக்கியோவிற்கு பயணம் செய்தார்.

2. இந்த பயணத்தின் போது, இந்திய வெளியுறவுத்துறை செயலாளர், ஜப்பான் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் திரு. மசடகா நோகானோவுடன் இருதரப்பு ஆலோசனைகளை நடத்தினார். இதில் அரசியல் உறவுகள், பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் மற்றும் மக்கள் இடையேயான உறவுகள் உள்ளிட்ட இந்தியா-ஜப்பான் சிறப்பு மூலோபாய மற்றும் உலகளாவிய கூட்டாண்மை பகுதிகளின் முழு வரம்பையும் ஆய்வு செய்தார். பின்னர் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளின் அளவையும், ஆழத்தையும் விரிவுபடுத்த இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர். மேலும் பொது நலன் சார்ந்த உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

3. ஜப்பானின் குவாட் ஷெர்பா மற்றும் வெளியுறவுத்துறை மூத்த துணை அமைச்சர் திரு. டேகிரோ புனகோஷி ஆகியோருடன் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் ஆலோசனை நடத்தியபோது, பிராந்திய நிலைமை மற்றும் இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் இந்தியா-ஜப்பான் ஒத்துழைப்பு மற்றும் பொதுவான நலன்களைப் பற்றிய பிற பிரச்சினைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்.

4. இந்த பயணத்தின் போது, வெளியுறவுத்துறை செயலாளர் பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம், பாதுகாப்பு அமைச்சகம் உள்ளிட்ட ஜப்பான் அரசின் மற்ற மூத்த அதிகாரிகளையும் சந்தித்து, ஜப்பானிய கொள்கை வகுப்பாளர்கள், சிந்தனைத் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள நிறுவன நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

5. இந்த பயணம் உயர்மட்ட இருதரப்பு பரிமாற்றங்களுக்கு களமிறங்க உதவியதுடன், இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் பங்களித்தது.

**புது தில்லி**
**பிப்ரவரி 08, 2024**